Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர் (இ) பூந்தமல்லி

அமர்வு வழக்கு எண்.155 2021

Depositions of : PW3
solemnly by S.Ramanujam, Translator

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பிரியங்கா | ஜாதி | : |
| கணவர் பெயர் | : பாலாஜி | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of September - 2024.

(எதிரிகள் 1 முதல் 5 வரை ஆஜர்.

முதல் விசாரணை:-

நான் தற்பொழுது வில்லிவாக்கம் நாதமுனி டீக்கடையில் பணிபுரிந்து வருகின்றேன். 14.11.2020 அன்று மாலை 3.30 மணியளவில் என்னுடைய கணவர் வீட்டைவிட்டு சென்றார். அதன் பிறகு இரவு 8.00 மணிக்கு எனது தங்கை லிடியா எனக்கு போன் செய்து உனது வீட்டுக்காரரை வெட்டிவிட்டார்கள் என்று சொன்னாள். அதன் பிறகு நான் கிளம்பி ஐ.சி.எப் காலணிக்கு சென்றேன். அங்கு என்னுடைய கணவர் இறந்த நிலையில் இருந்ததை பார்தேன். என்னுடைய கணவரை ஆம்புலன்ஸில் ஏற்றி கே.எம்.சி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அதன் பிறகு எமர்ஜென்ஸி வார்டில் எனது தங்கச்சி வீட்டுக்காரர் பாக்கியராஜை அனுமதித்து வைத்திருந்தார்கள். அதன் பிறகு எனது தங்கையின் விட்டுக்காரரை விசாரித்தேன். அதற்கு முன்பாகவே இந்த பிரச்சனை பற்றி

எனக்கு தெரியும். ஆஜர் எதிரி சதீஷ்குமாரின் செயினை என்னுடைய மச்சினன் சீனிவாசன் தான் எடுத்ததாக சொல்லி 13.11.2020 இரவு பிரச்சனை போய்க்கொண்டிருந்தது. மறுநாள் மாலை 3.30மணியளவில் எனது கணவர் வீட்டைவிட்டு கிளம்பினார். ஆஜர் எதிரி சதீஷ்குமார், தொப்ப சதீஷிக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டது. நான், என் தங்கச்சி பிரச்சனையாக இருக்கின்றது என்று போன் செய்தாள். நானும் என் வீட்டுக்காரரிடம் போன் செய்து வந்துவிடுங்கள் என்று கூறினேன். அவர் வரவில்லை. அவர் இறந்துவிட்டார் என்ற செய்தி மட்டும் தான் எனக்கு வந்தது. ஆஜர் எதிரிகள் 1ம் எதிரி சதீஷ், விஜயகுமார், ஆனந்த், சரண், தொப்ப சதீஷ் ஆகியோர் சேர்ந்து எனது கணவரை வெட்டிவிட்டார்கள் என்று கேள்விப்பட்டேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை=

போன்டா பாலாஜிக்கும் எனக்கும் 2012ல் திருமணம் நடைபெற்றது. எங்களுக்கு லவ் மேரேஜா அல்லது அரேஞ்சுடு மேரேஜா என்றால் லவ் மேரேஜ். திருமணத்திற்கு முன்பும், திருமணத்திற்கு பின்பும் போன்டா பாலாஜி மீது பல காவல் நிலையங்களில் வழக்குகள் இருக்கின்றதா என்றால் திருமணத்திற்கு முன்பு கிடையாது. திருமணத்திற்கு பின்புதான் வழக்குகள் போடப்பட்டன. உதயா, சொட்ட செல்வம், காட்டாங்கார்த்தி ஆகியோர் போன்டா பாலாஜியின் நண்பர்கள் என்றால் சரிதான். போன்டா பாலாஜியின் உடன் பிறந்த சகோதரர் சீனிவாசன் ரஞ்சித் என்ற டபுல் ரஞ்சித் என்ற கொலைவழக்கில் சேர்க்கப்பட்டுள்ளாரா என்றால் ஆமாம் சேர்க்கப்பட்டுள்ளார். ஆனால் எனது கணவர் போன்டா பாலாஜி இறப்பிற்கு பின்பாக சேர்க்கப்பட்டார். என்னுடைய கணவரின் நண்பர் உதயாவை கொலை செய்து விட்டார்கள் என்றால் சரிதான். என்னுடைய கணவர் அடிக்கடி அயப்பாக்கத்திற்கு செல்வார் என்றால் சரிதான். அங்கு அவருக்கு ஒரு பெண்ணோடு பழக்கம் இருந்தது என்று சொன்னால் அது தவறு. அந்த பெண்ணினுடைய கணவர் பல வழக்குகளில் தொடர்புடையவரா என்றால், என்னுடைய வீட்டுக்காரருக்கு எந்த பெண்ணுடனும் தொடர்பில்லை.

அவ்வாறு இருக்கும் பொழுது அவரின் கணவரைப்பற்றி எனக்கு எப்படி தெரியும். சம்பவத்திற்கு முன் தினம் என்னுடைய கணவர் போன்டா பாலாஜிக்கு ஒரு போன் வந்தது. அதில் நகை திருடுபோனது சம்மபந்தமாக பேசினார்கள். அதை என்னுடைய கணவரிடம் தான் பேசினார்கள். என்னிடம் பேசவில்லை. என்னுடைய கணவருக்கு பேசும் பொழுது என்ன நெம்பரில் இருந்து பேசினார்கள் என்று எனக்கு தெரியாது. மறு நாள் மாலை 3.30 மணிக்கு என் கணவர் கிளம்பி சென்றபொழுது நான் வில்லிவாக்கத்தில் இருந்த எனது வீட்டில் இருந்தேன். எனக்கு அயப்பாக்கத்தில் இருந்து இரவு 8.00 – 8.15 மணிக்கு எனது தங்கை லிடியா போன் செய்தார்கள். போலிசார் விசாரணையில் எனது தங்கை இரவு 8.00 – 8.15 மணிக்கு போன் செய்தார் என்ற விவரத்தை சொல்லியிருக்கின்றேன். நான் பொய்யாக சொல்லுகின்றேன் என்றாலும் போலிசார் விசாரணையில் அப்படி எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது கணவரை வெட்டிவிட்டார்கள் என்று எனது தங்கையின் வீட்டுக்காரர் பாக்கியராஜ் சொன்னார். என் தங்கை சொல்லவீல்லையா என்றால் என் தங்கையும் சோன்னார். பாக்கியராஜீம் சொன்னார். சதீஷ், ஆனந்த், சரண், விஜி ஆகியோர் வெட்டியதாகவும், தொப்ப சதீஷ் கத்தியை வைத்து தூரமாக நின்றிருந்ததாகவும் சொன்னார். பாக்கியராஜ் என்னிடம் சதீஷ், ஆனந்த், சரண், விஜி ஆகியோர் வெட்டியதாகவும்,தொப்ப சதீஷ் கத்தியை வைத்து தூரமாக நின்றிருந்ததாகவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. பாக்கியராஜிக்கு தெரியாத விவரத்தை என்னிடம் சொல்லியிருக்க வாய்பில்லை என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. ஐ.சி.எப் காலணி 33வது பிளாக்கில் இறந்த எனது கணவரின் உடலைப்பார்தேன். அங்கு நிறைய வீடுகள் இருக்கின்றன. நிறைய பேர் எனது கணவரின் உடலைப்பார்த்துக்கொண்டு நின்று கொண்டிருந்தார்கள். அவர்களின் பெயர் விவரம் எனக்கு தெரியாது. நான் ஐ.சி.எப் காலணிக்கு சென்று எனது கணவரின் உடலைப்பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. நான் ஐ.சி.எப் காலணிக்கு செல்லாததற்கு காரணம் என்னுடைய கணவருக்கு வேறு

பெண்னோடு தொடர்பு இருந்ததால் தான் என்று சொன்னாலும், அங்கு போனால் அந்த பெண்ணிற்கும் எனக்கும் சண்டை வரும் என்பதால் அங்கு போகவில்லை என்றால் சரியல்ல. நான் அங்கு போய் எனது கணவரின் உடலைப்பார்தேன். எனது கணவருக்கு பல விரோதங்கள் இருந்ததாலும், அயப்பாக்கத்திலும் விரோதங்கள் இருந்ததாலும், அதன் விளைவாக எனது கணவர் கொலை செய்யப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. சிலரின் தூண்டுதலின் காரணமாக ஆஜர் எதிரிகளுக்கு எதிராக நான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர் (இ) பூந்தமல்லி

அமர்வு வழக்கு எண்.155 / 2021

Depositions of : PW2
solemnly by S.Ramanujam, Translator

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | பாக்கியராஜ் | ஜாதி | : |
| தந்தை பெயர் | : | கஜேந்திரன் | தொழில் | : |
| கிராமம் | : | | சமயம் | : |
| தாலுக்கா | : | | வயது | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of September - 2024.

(எதிரிகள் 1 முதல் 5 வரை ஆஜர்.

முதல் விசாரணை:-

நான் தற்பொழுது புளியந்தோப்பு பகுதியில் ஆடுதொட்டியில் பணிபுரிந்து வருகின்றேன். அ.சா.1 லிடியா என்னுடைய மனைவி. 14.11.2020 அன்று இரவு 8.00 மணியளவில் நானும், போன்டா பாலாஜி இருவரும் அவுசிங் போர்டு இடத்தில் 41 நெம்பர் பிளாக் அருகே உட்கார்ந்து சரக்கு சாப்பிட்டு கொண்டிருந்தோம். அப்பொழுது ஒரு 3 = 4 பேர் அங்கே வந்தார்கள். யார் என்று எனக்கு தெரியாது. வந்தவர்கள் என்னுடைய சகலை போன்டாபாலாஜ ியுடன் பேசிக்கொண்டிருநதார்கள். நான் உட்கார்ந்து சரக்கு சாப்பிட்டுகொண்டிருந்தேன். அவன் தான் வந்தவர்களுடன் பேசிக்கொண்டிருந்தான். அப்பொழுது போன்டா பாலாஜி என்னை கூப்பிட்டான். நான் எந்திருச்சு போனேன். நான் ஓவராக சரக்கு சாட்பிட்டு விட்டு நிற்க

முடியாத நிலையில் இருந்தேன். அப்பொழுது என்னை கூப்பிட்டு அவர்களை அடி என்று சொன்னான். ஏன் என்று அவர்களை கேட்டேன். முதல் வெட்டு எனக்கு விழுந்தது. அவர்களை எனக்கு சரியாக அடையாளம் தெரியவில்லை. இன்று ஆஜராகி உள்ள 5 எதிரிகள் யாரும் அன்றைய தினம் சம்பவ இடம் வரவில்லை. எனக்கு முதல் வெட்டு விழுந்த உடனே போன்டா பாலாஜி அவுசிங் போர்டு சந்துக்குள்ளே ஓடிவிட்டார். அங்கிருந்து நான் என் அக்கா சங்கீதா வீட்டிற்கு சென்றேன். அவர் என்னை கே.எம்.சி. மருத்துவனையில் சேர்த்தார். அதன் பிறகு போன்டா பாலாஜி இறந்துவிட்டார் என்று என் அக்கா என்னிடம் கூறினார். எனக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்துக்கொண்டிருந்தபோது போன்டா பாலாஜியை ஆம்புலன்ஸில் மருத்துவமனைக்கு எடுத்துவந்தார்கள். போலிசார் என்னை இது சம்மந்தமாக விசாரணை செய்தார்கள்.

(அறிவார்ந்த அரசுதரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாகக் கருதி குறுக்குவிசாரணை செய்ய அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.)

அரசு தரப்பில் குறக்கு விசாரணை=

13.11.2020 அன்று மாலை 4.30 மணிக்கு சதீஷ் ஆட்டோவில் படுத்திருந்த பொழுது அவரின் செயினை போன்டா பாலாஜி தம்பி சீனிவாசன் திருடிவிட்டதாக சந்தேகப்பட்டு கேட்டு அவர்களுக்குள் வாய் தகராறு ஏற்பட்டது என்றால், நான் நேரடியாக எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை. ஆனால் ஊரில் இப்படி சம்பவம் நடைபெற்றதாக கூறினார்கள். 14.11.2020அன்று மாலை 4.00 மணியளவில் நான் வீட்டிற்கு சென்றபோது போன்டா பாலாஜிக்கும், சதீஷிக்கும் வாய்த்தகறாறு ஏற்பட்டது என்றால் சரியல்ல. 14.11.2020 அன்று இரவு 8.45 மணியளவில் என்னுடைய மனைவி, லிடியா, பாலாஜி ஆகியோர் அயனம்பாக்கம் ரோட்டில் வந்தபொழுது பாலாஜியை, சதீஷ்குமார், சதீஷ் குமாரின் மச்சான், விஜி, சதீஷ்குமாரின் சித்தி பசங்க ஆனந்த் மற்றும் சரண் ஆகியோர் ஐ.சி.எப் காலணி குடிசைமாற்று வாரியத்தின் 35வது பிளாக் பின்புறம் எனது செயினையும் எடுத்துக்கொண்டு என்னையும் மிரட்டுரியா என்று கூறி பாலாஜியையும் மாறி

மாறி வெட்டினார்கள் என்று போலீஸ் விசாரணையில் கூறினேனா என்றால் என்னிடம் ஒயிட் பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். எனக்கு எழுதப்படிக்க தெரியாது. வெட்டுப்பட்ட என்னை அக்கா சங்கீதா மூலம் கே.எம்.சி மருத்துவமனைக்கு வந்துவிட்டேன் என்று சொல்லியிருக்கின்றேன் என்றால் சரிதான். என்னுடைய மனைவி லிடியா போன் செய்து சதீஷிம், 3 நபர்களும் பாலாஜியை தலை, காது, நெற்றி ஆகிய இடங்களில் வெட்டியதால் பாலாஜி இறந்துவிட்டார் என்று சொன்னேன் என்றால் சரியல்ல. என்னை அடையாளம் தெரியாத நபர்கள் வெட்டியதாகவும், சம்பவம் இரவு 9.00 மணிக்கு நடந்ததாகவும் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னை மருத்துவமனையில் போலிசார் வந்து விசாரிக்கவில்லை. நான் எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

1 முதல் 5 வரை உள்ள எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை=

என்னுடைய சகலை போன்டா பாலாஜி மீது பல காவல் நிலையங்களில் பல வழக்குகள் உள்ளன என்றால் சரிதான். போன்டா பாலாஜி, அவரின் தம்பி சீனிவாசன், செல்வா என்ற சொட்ட செல்வா, கார்த்தி (எ) காட்டாங்கார்த்தி, உதயா (எ) உதயகுமார் ஆகியோகளுக்கும், ரஞ்சித் (எ) டபுல் ரஞ்சித், சரவணன் (எ) ஆடு சரவணன், நவீன் ஆகியோர்களுக்கும் இடையே முன்விரோதம் இருக்கின்றது என்று சொன்னால் சரிதான். போன்டா பாலாஜியின் சகோதரர் சீனிவாசன், உதயா, செல்வம் (எ) சொட்ட செல்வம், கார்த்தி (எ) காட்டாங்கார்த்தி ஆகியோர் ரஞ்சித் (எ) டபுல் ரஞ்சித்தை கொலை செய்தது பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இதற்கு பதிலாக போன்டா பாலாஜியின் நண்பரான உதயாவை, ஆடு சரவணனும், அவருடைய ஆட்களும் கொலை செய்தது பற்றி தெரியும். போன்டா பாலாஜியின் மச்சான்கள் பப்பு, அப்பு. அவர்கள் மீதும் பல காவல் நிலையங்களில் வழக்கு இருக்கின்றது. என்னுடைய மனைவி லிடியா மீதும் வழக்கு இருக்கின்றது. சம்பவத்தன்று சரக்கு சாப்பிட்டுக்கொண்டிருந்த போது நானும், போன்டா பாலாஜியும் மட்டும் தான் இருந்தோம். லிடியா அங்கு இல்லை வீட்டில் இருந்தது. என்னை வெட்டிய போதும், போன்டாபாலாஜியை வெட்டிய

போதும் லிடியா பார்க்கவில்லை. லிடியா மருத்துவமனைக்கு வந்து என்னை பார்க்கவில்லை. என்னிடம் போனிலும் பேசவில்லை. போன்டா பாலாஜி மனைவி பிரியங்கா என்னை மருத்துவமனையில் வந்து பார்த்து பாலாஜி இறந்துவிட்டதாக சொல்லிவிட்டு சென்றுவிட்டார். ஆஜர் எதிரிகளை எனக்கு இதற்கு முன்பாக தெரியாது. இன்று தான் முதன் முதலில் நீதிமன்றத்தில் பார்க்கின்றேன். பிரியங்காவிடம் வேறு எந்த விவரமும் நான் சொல்லவில்லை.

மறுவிசாரணை இல்லை.

Judicial from No.53

(Sec Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருவள்ளூர் (இ) பூந்தமல்லி

அமர்வு வழக்கு எண்.155/2021

Depositions of : PW1
solemnly by S.Ramanujam, Translator

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : லிடியா | ஜாதி | : |
| கணவர் பெயர் | : பாக்கியராஜ் | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of September - 2024.

(எதிரிகள் 1 முதல் 4 வரை ஆஜர்)

முதல் விசாரணை:-

நான் தற்பொழுது ஐ.சி.எப். காலணி அம்பத்தூரில் குடியிருந்து வருகின்றேன். நான் எந்த வேலையும் பார்த்துவரவில்லை. கடந்த 14.11.2020 அன்று காலை 9.00 மணிக்கு நான் என்னுடைய வீட்டில் இருந்தேன். அப்பொழுது எனக்கு முன்பே தெரிந்த எனது வீட்டில் இருந்து 2 பிளாக் தள்ளி இருக்கின்ற இன்று முன்னிலையாகியிருக்கின்ற 1ம் எதிரி சதீஷீம் (சாட்சி 1ம் எதிரியை அடையாளம் காட்டுகின்றார்) அவரது மனைவி நந்தினியும் எனது வீட்டிற்கு வந்தார்கள். என் வீட்டிற்கு வந்து என்னுடைய அக்காவின் கணவர் போன்டா பாலாஜியின் தம்பி சீனிவாசன் தான், சதீஷின் செயினை திருடிவிட்டதாக என்னிடம் சொன்னார்கள். நான் அதற்கு எனது மாமா பாலாஜியிடமும், அக்கா பிரியங்காவிடமும் கேட்டு விட்டு சொல்வதாக கூறினேன். அன்று மாலை 4.00 மணிக்கு நான் என்னுடைய

வீட்டில் இருந்தபொழுது என்னுடைய மாமா பாலாஜி என்னுடைய வீட்டிற்கு வந்தார். நான் எனது மாமாவிடம் சதீஷும், சதீஷ் மனைவியும், சீனிவாசன் தான் நகையை திருடியாக சொல்கின்றார்கள் என்று கூறினேன். அதற்கு அவர் நான் போய் கேட்கிறேன் என்று சொல்லிவிட்டு போய்விட்டார். அதன் பிறகு அன்றைய தினம் இரவு 8.00 மணியளவில் நான் என் கணவர் பாக்கியராஜ், என்னுடைய மாமா பாலாஜி ஆகிய மூவரும் அயப்பாக்கம் ரோட்டில் கடைக்கு நடந்து போய் கொண்டிருந்தோம். அப்போழுது இருட்டி விட்டது 4 பேர் பின்னாடியே வந்தார்கள். அந்த 4 பேரில் சிலருடைய முகம் அடையாளம் தெரிந்தது. சிலருடைய முகம் அடையாளம் தெரியவில்லை. அப்பொழுது 1ம் எதிரி சதீஷும் மற்ற மூவரும் கத்தியை வைத்து என்னுடைய மாமா பாலாஜியை வெட்டினார்கள். தடுக்கபோன என்னுடைய கணவருக்கு வலது கன்னத்தில் காயம் ஏற்பட்டது. அதை பார்த்து நான் பயந்து ஓரமாக நின்றுவிட்டேன். சம்பவத்தின் போழுது எங்களுக்கு பின்னால் வந்தவர்கள் 1ம் எதிரி சதீஷ், 2ம் எதிரி விஜி, 3-வதாக நிற்பவர் பெயர் எனக்குத் தெரியாது. அவர் அன்றைய தினம் மாஸ்க் போட்டிருந்தார். இன்று ஆஜராகி இருக்கின்ற மற்ற எதரிகளை எனக்கு தெரியவில்லை. இருட்டாக இருந்ததால் அவர்கள் முகம் எனக்கு அடையாளம் தெரியவில்லை. (சாட்சி வரிசை கிரமமாக நின்றிருந்த எதிரிகளை பார்த்து அடையாளம் காட்டி மேலே கண்டவாறு சாட்சியம் அளித்தார்). என்னுடைய மாமா பாலாஜிக்கு பின்னந்தலை, இடது கை சுண்டுவிரல், வலது கண் புருவம் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. அதன் பிறகு எதிரிகள் ஓடிப்போய்விட்டார்கள். என்னுடைய கணவரும் பயந்து அந்த இடத்தில் இருந்து ஓடிவிட்டார். நான் மட்டும் அந்த இடத்தில் நின்றிருந்தேன். அதன் பிறகு போலிசார் 20 நிமிடம் கழித்து அந்த இடத்திற்கு வந்தார்கள். போலிசார் அந்த இடத்தில் என்னை விசாரித்தார்கள். அதன் பிறகு மறுநாள் போய் அம்பத்தூர் எஸ்டேட் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் நான் கொடுத்த புகார் அது அ.த.சா.ஆ.1. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதன் பிறகு மருத்துவமனையில்

இருந்த என்னுடைய கணவர் எதிரிகளின் பெயரை என்னிடம் கூறினார். அதன் பிறகு என் கணவரை மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அப்பொழுது என் கணவர் எதிரி தொப்பை சதீஷ் சம்பவ இடத்தில் ஓரமாக சத்தியை வைத்துக்கொண்டு நின்று கொண்டிருந்ததாக என்னிடம் சொன்னார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர்.

1 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை=

என்னுடைய மாமா பாலாஜி வில்லிவாக்கத்தை சேர்ந்தவர். அவர் மீது பல காவல் நிலையங்களில் பல வழக்குகள் இருந்தது என்று சொன்னால் சரிதான். உதயா, காட்டாங்கார்த்தி, செல்வம் என்பவர்கள் எல்லாம் என்னுடைய மாமா பாலாஜினுடைய நண்பர்கள் என்று சொன்னால் இவர்களை எனக்குத் தெரியாது. என்னுடைய மாமா சீனிவாசன் மற்றும் உதயா, காட்டாங்கார்த்தி, செல்வம் ஆகியோர் ரஞ்சித் (எ) டபுள் ரஞ்சித்தை கொலை செய்த வழக்கில் எதிரிகள் என்று சொன்னால் இல்லை என்று சாட்சி கூறுகின்றார். போன்டா பாலாஜி தம்பி ஆறு (எ) ஆறுமுகத்தின் மீது காவல் நிலையத்தில் பல வழக்குகள் நிலுவையில் இருந்து வருகிறது என்று சொன்னால் அப்படி இல்லை. போன்டா பாலாஜியின் தம்பி ஆறு (எ) ஆறுமுகமும், சீனிவாசனும், ரஞ்சித் என்பவரை கொலை செய்த வழக்கில் குண்டர் தடுப்பு சட்டத்தின் கீழாக சிறையில் இருந்து வருகின்றார்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. என் உடன் பிறந்த சகோதரர்கள் ஜோஸ்வா, பப்பு (எ) டால்பின் ஆகியோர்கள். இவர்கள் மீது பல காவல்நிலையத்தில் பல வழக்குகள் இருக்கின்றது என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. சம்பவத்தன்று காலை 9.00 மணிக்கு சதீஷும் அவரின் மனைவியும் என்னுடைய வீட்டிற்கு வந்தார்கள். சதீஷின் செயின் திருடுபோன தேதி, வருடம், மாதம் எனக்குத் தெரியாது. அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் சதீஷ் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் பொய்யாக சொல்கின்றேன் என்றாலும், சதீஷ் அம்பத்தூர் எஸ்டேட் குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் தனது தங்க செயின் காணமல் போனது சம்மந்தமாக புகார் கொடுத்திருந்தார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நான் பொய் சொல்கின்றேன் என்றாலும், சதீஷ் காவல்

நிலையத்தில் புகார் கொடுத்துவிட்டதால் சதீஷிம் அவரின் மனைவியும் எனது வீட்டிற்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தன்று போன்டா பாலாஜி என்னுடைய வீட்டிற்கு மாலை 4.00 மணிக்கு வந்தார். போன்டா பாலாஜி, சதீஷிடமும், அவரின் மனைவி நந்தினியிடமும் கேட்பதாக கூறினார். சதீஷிடமும் அவரின் மனைவி நந்தினியிடமும் சென்று போன்டா பாலாஜி பேசியதை நான் பார்க்கவில்லை. என்னுடைய மாமா போன்டா பாலாஜி கடைக்கு போகும் பொழுது சதீஷிடமும் அவரின் மனைவியிடமும் பேசியதாக என்னிடம் சொன்னார். இவ்வாறு என்னுடைய மாமா என்னிடம் சொன்னபொழுது என்னுடைய கணவர் அருகில் இருந்தார். என்னுடைய மாமா போன்டா பாலாஜி, நான் சொன்னதை போல சதீஷிடமும் அவரின் மனைவியிடமும் எதுவும் கேட்கவில்லை என்றாலும், அவ்வாறு கேட்டதாக என்னிடம் சொல்லவில்லை என்றாலும், அப்பொழுது என்னுடைய கணவர் உடன் இருந்ததாகச் சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தன்று நானும், என்னுடைய என்னுடைய மாமா பாலாஜி, என்னுடைய கணவர் ஆகிய மூவரும் வீட்டை விட்டு இரவு 7.50 மணிக்கு கிளம்பினோம். எதிரி சதீஷிம் மற்ற 3 நபர்களும் எங்களுக்கு பின்னால் வந்த பொழுது இரவு 8.00 மணியிருக்கும். என்னுடைய வீட்டில் இருந்து எதிரிகள் துரத்த ஆரம்பித்த இடம் 1 பிளாக் தள்ளி இருக்கும். ஒரு பிளாக்கிற்கும் மற்றொரு பிளாக்கிற்கும் இடையே சுமார் 15 அடி தூரம் இருக்கும். அயப்பாக்கத்திற்கும் என்னுடைய வீட்டிற்கும் இடையே எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் கொஞ்ச தூரம் இருக்கும் என்று சாட்சி கூறுகின்றார். நான் பொய் சொல்கின்றேன் என்றாலும், குடிசைமாற்று வாரிய வீடுகள் சுமார் அரைகிலோமீட்டர் சுற்றளவிற்கு இருக்கின்றது என்றாலும், அங்கிருந்து 1 கிலோ மீட்டர் தூரத்தில் தான் அயப்பாக்கம் சாலை இருக்கின்றது என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் துரத்த ஆரம்பித்தவுடன் நாங்கள் மூவரும் ஓடினோம். என்னுடைய மாமாபோன்டா பாலாலஜி முதலில் ஓடினார். அடுத்து என்னுடைய கணவர் ஓடினார். நான் பயந்து ஓரமாக நின்றுவிட்டேன். போலிசார் என்னை விசாரித்த பொழுது என்னுடைய மாமா பாலாஜியை எதிரிகள் வெட்டியபொழுது

நேரடியாக பார்க்கவில்லை என்றும், பின்னிட்டு தான் நான் சென்று பார்த்ததாக சொல்லியிருக்கின்றேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த புகார் மனுவிலும், போலிசார் விசாரணையிலும் நான்கு நபர்கள் என் மாமாவை வெட்டிவிட்டு வெட்டியவர்கள் ஓடிய பிறகு தான், நானும், அங்கிருந்தவர்களும் போய் என்னுடைய மாமாவை பார்த்ததாக சொல்லியிருக்கின்றேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி, நேரத்தில், நான் சம்பவ இடத்தில் இறந்துபோன என்னுடைய மாமா பாலாஜி மற்றும் எனது கணவர் பாக்கியராஜீடன் சென்றதாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் மருத்துவமனைக்கு சென்ற பொழுது என்னுடைய கணவர் மற்ற எதிரிகளின் விவரங்களை என்னிடம் சொன்னார் என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் புகார் கொடுத்த பிறகு போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்று சொன்னால் புகார் கொடுத்த பொழுது விசாரித்தார்கள் அதன் பிறகு விசாரிக்கவில்லை. இறந்துபோன என்னுடைய மாமா அடிக்கடி என்னுடைய வீட்டிற்கு வருவார். அவர் வரும் பொழுது வேறு நபர்களுடன் வரமாட்டார். தனியாகதான் வருவார். என்னுடைய மாமா பாலாஜிக்கும், அயப்பாக்கம் பகுதியை சேர்ந்த ஒரு பெண்ணிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்று சொன்னால் சரியல்ல. அந்த பெண்ணின் கணவர் ஒரு சரித்திர பதிவேடு கொண்ட நபர் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மாமா பாலாஜிக்கும், ரஞ்ஜீத் (எ) டபுல் ரஞ்ஜீத் மற்றும் சரவணன் (எ) ஆடு சரவணனுக்கும் விரோதம் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. ரஞ்ஜீத் (எ) டபுல் ரஞ்ஜித்தை கொலை செய்த வழக்கில் என்னுடைய மாமாவின் உடன் பிறந்த சகோதரர் சீனிவாசன் குற்றவாளியாக இருக்கின்றார் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மாமா பாலாஜிக்கு பல விரோதிகள் இருந்ததாலும், அவர் அயப்பாக்கம் பகுதியை சேர்ந்த பெண்ணிடம் தொடர்பில் இருந்ததாலும் அவர்கள் தான் என்னுடைய மாமாவை கொலைசெய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தன்று சம்பவ இடத்தில் நான் இல்லை என்றாலும், நான் எந்த ஒரு சம்பவத்தையும் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் வீட்டில் தான் இருந்தேன் என்று

சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் நான் தூண்டுதலின் பெயரில் பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை :- இல்லை.